


20.05.2025

தலைப்பு செய்திகள்

- நாடுமுழுவதும் 18 மாநிலங்களில் 103 அம்ரித் பாரத் ரயில்நிலையங்களை பிரதமர் திரு.நரேந்திரமோடி நாளை மறுநாள் திறந்துவைக்கிறார்.
- நாட்டில் வரும் 29ஆம் தேதி தொடங்க உள்ள தேசிய வேளாண் பிரச்சாரத்தில் மாணவர்களும், பேராசிரியர்களும், பங்கேற்க வேளாண் அமைச்சர் திரு. சிவ்ராஜ்சிங் சவ்ஹான் அழைப்பு விடுத்துள்ளார்.
- சென்னை மாநகராட்சி பகுதியில் மேற்கொள்ளப்படும் மழைநீர் வடிகால் கால்வாய் தூர்வாரும் பணிகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று நேரில் ஆய்வு செய்தார்.
- தென்பெண்ணை ஆற்றில் வெள்ளபெருக்கு காரணமாக கிருஷ்ணகிரி தர்மபுரி திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
- மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டிகள் கோலாலம்பூரில் இன்று தொடங்குகின்றன.

இனி விரிவான செய்திகள்

*********

பிரதமர் - ரயில் நிலையம்

நாடுமுழுவதும் 18 மாநிலங்களில் 103 அம்ரித் பாரத் ரயில்நிலையங்களை பிரதமர் திரு.நரேந்திரமோடி நாளை மறுநாள் காணொலி வாயிலாக திறந்துவைக்கிறார்.

அம்ரித் பாரத் ரயில் நிலைய மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சீரமைக்கப்பட்ட ஸ்ரீரங்கம், பரங்கிமலை, திருவண்ணாமலை, விருதாச்சலம், சூலூர்பேட்டை உள்ளிட்ட ரயில் நிலையங்கள் இதில் அடங்கும்.

அம்ரித் திட்டத்தின் கீழ் ஆயிரத்து 300 ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டு வரும் நிலையில், பணிகள் நிறைவடைந்த 103 நிலையங்களை பிரதமர் ராஜஸ்தானிலிருந்து திறந்து வைக்க உள்ளார்.

முற்றிலும் பெண் பணியாளர்களை கொண்டு இயங்க உள்ள தெலங்கானாவின் பேஹம்பட் ரயில்நிலையத்தையும் பிரதமர் திறந்துவைக்கிறார்.

இந்த நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள நவீன செயல்திட்ட கண்காணிப்பு கருவிகள் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வகை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பயணியருக்கான தகவல் அமைப்பு வசதி, இலவச wi fi சேவைகள், ஓய்வறைகள், இழுவான்கள் உள்ளிட்ட பல்வேறு நவீன வசதிகளுடன் அம்ரித் ரயில்நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

*********

சிவ்ராஜ்சிங் சவ்ஹான்

நாட்டில் வரும் 29ஆம் தேதி தொடங்க உள்ள க்ரிஷி சங்கல்ப் அபியான் தேசிய வேளாண் பிரச்சாரத்தில் மாணவர்களும், பேராசிரியர்களும், துணைவேந்தர்களும் பங்கேற்க மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவ்ராஜ்சிங் சவ்ஹான் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் வேளாண் பல்கலைகழகங்கள் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர்கள் மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், அறிவியல் ரீதியிலான வேளாண் மாற்றங்களை முன்னெடுத்துச்செல்வதே மத்திய அரசின் உயர் முன்னுரிமை என்று குறிப்பிட்டார்.

இந்திய அறிவியல் ஆராய்ச்சி மையம் வேளாண்மையின் கோவிலாக திகழ்கிறது என்று கூறிய அவர் உழவர்களின் பண்ணை தேவைகளுக்கு ஏற்ப ஆராய்ச்சிகள் முடிவு செய்யப்படுவதாக குறிப்பிட்டார்.

உற்பத்தி அதிகரிப்பு, உற்பத்திக்கான விலை குறைப்பு, பண்ணை பிரிவில் பண்முக தன்மை, நிலையான வேளாண்மை போன்ற பிரிவுகளில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றார்.

நாட்டின் வேளாண் பிரிவு வளர்ச்சி கண்டு உலகின் உணவு மையமாக இந்தியா வளர மத்திய மாநில அரசுகள் வேளாண் நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயல்படுவதன் அவசியத்தையும் அமைச்சர் வலியுறுத்தினார்.

*********

மனோகர் லால் கட்டார்

உலக அளவில் எரிசக்தி பாதுகாப்பு மிகப்பெரிய சவாலாக உருவெடுத்துள்ளது என்று மத்திய மின்துறை அமைச்சர் திரு.மனோகர் லால் கட்டார் தெரிவித்துள்ளார்.

பிரேசிலில் நடைபெறும் பிரிக்ஸ் நாடுகளின் எரிசக்தி அமைச்சர்கள் கூட்டத்தில் உரையாற்றிய அவர் தூய்மை எரிசக்தி தொடர்பான இந்தியாவின் சாதனைகளை பட்டியலிட்டார்.

கடந்த 10 ஆண்டுகளாக நாட்டில் மேற்கொள்ளப்படும் மின் விரிவாக்க பணிகள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பிரிவில் எழுச்சி, பசுமை ஹைட்ரஜன் திட்டம் போன்றவற்றை அவர் எடுத்துரைத்தார்.

பொருளாதார நிலைத்தன்மை, நீடித்த வளர்ச்சிக்கான ஒத்துழைப்பு போன்றவற்றில் உறுப்பு நாடுகளின் ஒருங்கிணைப்பின் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

தூய்மை எரிசக்தி திட்டங்களை முன்னெடுத்து செல்வதில் இந்தியாவின் உறுதிபாட்டை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

*********

விக்ரம் மிஸ்ரி

ஆபரேசன் சிந்தூர் தாக்குதல் தொடர்பாக உலக நாடுகளிடம் விளக்கம் அளிக்க உள்ள அனைத்து கட்சி பிரதிநிதிகள் குழுவிடம் வெளியுறவுத்துறை செயலர் திரு.விக்ரம் மிஸ்ரி இன்று உரையாற்றுகிறார்.

இக்குழு உலகின் பல நட்பு நாடுகளுக்கு சென்று ஆபரேசன் சிந்தூர் துல்லிய தாக்குதல் குறித்து எடுத்துரைப்பதற்காக வரும் 23ஆம் தேதி தங்களது பயணத்தை தொடங்க உள்ளனர்.

காங்கிரஸ் உறுப்பினர் திரு.சசிதரூர்,

பிஜேபி உறுப்பினர் திரு.ரவிசங்கர் பிரசாத்,

ஐக்கிய ஜனதாதள் உறுப்பினர் திரு.சஞ்சய் குமார்,

திமுக உறுப்பினர் கனிமொழி கருணாநிதி

தேசிய வாத காங்கிரஸ் உறுப்பினர் சுப்ரியா சுலே,

சிவசேனா உறுப்பினர் ஏக்நாத் ஷிண்டே ஆகியோர் தலைமையிலான 7 குழுவில் இடம்பெற்றுள்ள 59 உறுப்பினர்கள் ஐ.நா.பாதுகாப்பு கவுன்சில் உட்பட 32 நாடுகளுக்கு பயணிக்க உள்ளனர்.

வரும் 23ஆம் தேதி தொடங்கும் இந்த பயணம் அடுத்த மாதம் 1ஆம் தேதிவரை தொடர்கிறது.

இக்குழுவினர் அமெரிக்கா, சவுதி அரேபியா, பஹ்ரைன், குவைத், அல்ஜீரியா, பிரிட்டன், ஃபிரான்ஸ், ஜெர்மனி இத்தாலி, டென்மார்க், கயானா, பிரேசில், கொலம்பியா, தென்கொரியா, ஜப்பான், சிங்கப்பூர் நாடுகளுக்கு செல்ல உள்ளனர்.

தீவிரவாதத்திற்கு எதிரான பூஜ்ஜிய நிலைப்பாடு குறித்த இந்தியாவின் செய்தியை இந்நாடுகளிடம் எடுத்துரைப்பதோடு பயங்கரவாதத்தை அனைத்து நிலைகளிலும் எதிர்கொள்ள தயாராக இருக்கும் இந்தியாவின் ஒருமித்த நிலைமை குறித்தும், அணுகுமுறை குறித்தும் இக்குழுவினர் பறைசாற்ற உள்ளனர்.

*********

தர்மபுரி

ஆபரேசன் சிந்தூர் வெற்றியை தேசம் பெருமிதத்துடன் கொண்டாடிவரும் நிலையில் இந்திய வீரர்களின் துணிச்சலை தேசம் தலை வணங்குகிறது.

இதன் ஒருபகுதியாக தர்மபுரி மாவட்டம் தகடூரில் முன்னாள் ராணுவ வீரர்கள் பங்கேற்ற ஆப்ரேஷன் சிந்தூர் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

நமது முப்படை வீரர்கள் சிறப்பாக செயல்பட்டு இந்த தாக்குதலை துணிச்சலுடன் மேற்கொண்டதாக கர்னல் சேரன் செங்குட்டுவன் பாராட்டு தெரிவித்துள்ளார்.

வாய்ஸ் - -

*********

எம்.ஆர்.ஸ்ரீனிவாசன்

இந்திய அணுசக்தி ஆணையத்தின் முன்னாள் தலைவர் டாக்டர் எம்.ஆர்.ஸ்ரீனிவாசன் உதகையில் இன்று காலமானார்.

அன்னாருக்கு வயது 95.

அணுசக்தி திட்டத்திற்காக அவர் ஆற்றிய சிறந்த பங்களிப்பை கவுரவிக்கும் வகையில் பத்ம ஸ்ரீ, பத்ம விபூஷன் விருதுகளை பெற்றவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரது மறைவிற்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

*********

முதலமைச்சர் - பருவமழை

தென்மேற்கு பருவமழை முன்னெச்சரிக்கை பணிகளை உடனடியாக மேற்கொள்ள முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை மாநகராட்சி பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும், மழைநீர்வடிகால், கால்வாய் தூர் வாருதல் பணிகளை இன்று நேரில் ஆய்வு செய்தார்.

*********

முதலமைச்சர் - அடிக்கல்

தமிழ்நாடு உயர்கல்வித்துறை சார்பில் அரசு கலை அறிவியல், பொறியியல், பலவகை தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் பல்கலைகழகங்களில் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வகுப்பறை, ஆய்வகம், விடுதி கட்டிடங்களை முதலமைச்சர் இன்று திறந்துவைத்தார்.

சென்னை ராணிமேரி கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் 207 கோடி ரூபாய் மதிப்பில் புதிதாக கட்டப்பட உள்ள உயர்கல்வித்துறை கட்டிடங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு வீட்டுவசதி நகர்புற வளர்ச்சி துறையின் கீழ் 736 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்களை சென்னை தலைமை செயலகத்திலிருந்து முதலமைச்சர் காணொலி வாயிலாக இன்று திறந்துவைத்தார்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 109 பேருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 16 பேருக்கு ஆணைகளை முதலமைச்சர் இன்று வழங்கினார்.

*********

பெரியகருப்பன்

பெண் கல்வி மேம்பாட்டிற்க்கு பல்வேறு சிறப்பு திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருவதாக கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மாநிலத்தில் பெண்கல்வி வளர்ச்சி பெருமளவு உயர்ந்துள்ளதாக கூறினார்.

*********

பள்ளிகல்வித்துறை

தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு வரும் 2ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் முன்பாகவே பாட புத்தகங்கள் முழுமையாக வழங்கப்படும் என்று பள்ளிகல்வித்துறை அறிவித்துள்ளது.

நடப்பு கல்வியாண்டிற்கு தேவையான 4 கோடியே 19 லட்சம் புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்க தயார்நிலையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

*********

வேலூர்

வேலூர் மாவட்டத்தில் கோவிட் தடுப்பு நடவடிக்கையாக மருத்துவர்களும், அதிகாரிகளும் தொடர் கண்காணிப்பை முனைப்புடன் மேற்கொண்டு வருவதாக ஆட்சித்தலைவர் திருமதி.சுப்புலட்சுமி தெரிவித்துள்ளார்.

வேலூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வெயிலால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

வாய்ஸ் - -

*********

தூத்துக்குடி

தூத்துக்குடி மாவட்டத்தில் அனைத்து மாணவ மாணவியரும் உயர்கல்வியில் சேர்வதற்கான கண்காணிப்பு வழிகாட்டும் கனவு கட்டுப்பாட்டு அறையை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இளம்பகவத் இன்று திறந்துவைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இந்த கட்டுப்பாட்டு அறையில் ஆசிரியர்கள் மாணாக்கரை கண்காணித்து உயர்கல்வியில் சேர்வதை உறுதி செய்வார்கள் என்றார்.

வாய்ஸ்

*********

இருவரி

அரியலூர் வட்டாச்சியர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற வருவாய் தீர்வாயத்தில் ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தனுதிவாய்ந்த மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தினார்.

இம்மாவட்டத்தில் 70க்கும் மேற்பட்ட கிராமங்களில் இன்று ஜமாபந்தி நடைபெற்றது.

திருப்பத்தூர் மாவட்டம் நாற்றம்பள்ளி வட்டத்தில் உங்களை தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் நாளை தொடங்கி இரண்டு நாட்கள் ஆட்சித்தலைவர் திருமதி சிவசௌந்தரவள்ளி ஆய்வு மேற்கொள்ள உள்ளார்.

உலக தேனீக்கள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

திருப்பூர் மாவட்டம் காங்கேயம் அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் உயிரிழந்தனர்.

காயமடைந்த ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே இம்மாவட்டத்தில் சாயக்கழிவு நீர்தொட்டியில் விஷ வாயு தாக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மூன்றாக உயர்ந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக ஆலை உரிமையாளர் உள்ளிட்ட 3 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

*********

கிருஷ்ணகிரி – வெள்ள அபாயம்

நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை காரணமாக கிருஷ்ணகிரி நீர் தேக்கத்திற்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால் தென்பெண்ணை ஆற்றில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக கிருஷ்ணகிரி தர்மபுரி திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தென்பெண்ணை ஆற்றங்கரையோர மக்கள் ஆற்றில் இறங்கவோ, குளிக்கவோ வேண்டாம் என மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

கிருஷ்ணகிரி ஓசூர், சூளகிரி பகுதிகளில் தொடர்மழை காரணமாக கிருஷ்ணகிரி அணை நிரம்பும் தருவாயில் உள்ளது.

52 அடி கொள்ளளவு கொண்ட இந்த அணைக்கு வரும் 4 ஆயிரத்து 208 கன அடி நீர் முழுமையாக வெளியேற்றப்படுகிறது.

கெலவரப்பள்ளி நீர்தேக்க அணையிலிருந்து ஆயிரத்து 449 கன அடி தண்ணீர் 7 மதகுகள் வழியாக தென்பெண்ணை ஆற்றில் திறக்கப்பட்டுள்ளது.

44 அடி கொள்ளளவு கொண்ட கெலவரப்பள்ளி அணையின் நீர்மட்டம் தற்போது 40.67 அடியை எட்டியுள்ளது.

ஆற்றுநீர் கரைபுரண்டு ஓடுவதால் கரையோர கிராமங்களான சின்ன கொள்ளு, பெத்த கொள்ளு, தட்டனபள்ளி உள்ளிட்ட கிராம மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 4 ஆயிரத்து 208 கனஅடியாக அதிகரித்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 87.10 அடியாக உயர்ந்துள்ளது.

பொதுமக்கள் ஆற்றில் இறங்க வேண்டாம் எனவும், நீப்பத்துறை சென்னியம்மன் ஆலயத்திற்கு செல்ல வேண்டாம் எனவும் திருவண்ணாமலை மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

*********

மேட்டூர்

இதனிடையே மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று 9 ஆயிரத்து 683 கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 109.33 அடியாக உயர்ந்துள்ளது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றிலும் நீர்வரத்து இன்று வினாடிக்கு 8 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

*********

குற்றாலம்

மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் சாரல் மழையால் குற்றாலம் பிரதான அருவியில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால் சுற்றுலா பயணிகள் அருவியில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் ஐந்தருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

*********

வானிலை

தென்மேற்கு பருவமழை கேரளாவில் அடுத்த 4, 5 தினங்களில் தொடங்க வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்திலும் இது சில பகுதிகளில் பரவுவதற்கான வாய்ப்புள்ளதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

இந்நிலையில், வரும் 22ம் தேதி கர்நாடக கடலோர பகுதிகளுக்கு அப்பால், மத்திய கிழக்கு அரபிக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகக்கூடும் என்றும்,

இது வடக்கு திசையில் நகர்ந்து வலுவடையககூடும் என்றும் இம்மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் இன்று கன, மிககனமழையும், தேனி, திருப்பூர், திண்டுக்கல்:, கோவை, ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*********

பேட்மிண்டன்

மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டிகள் கோலாலம்பூரில் இன்று தொடங்குகின்றன.

இந்தியாவின் பி.வி.சிந்து, H.S. பிரணாய், மாள்விகா பன்சோத், உன்னாட்டி ஹூடா, பிரியான்ஷு ரஜாவத், ஆயுஷ் ஷெட்டி, சதீஸ் கருணாகரன் உள்ளிட்டோர் களமிறங்குகின்றனர்.

*********

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் டெல்லியில் இன்று இரவு ஏழரை மணிக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் - ராஜஸ்தான் ராயல்ஸை எதிர்கொள்கிறது.

*********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது